# 1

# அகீதா

ثُمَّ أَرْسَلْنَا رُسُلَنَا تَتْرَا كُلَّ مَا جَآءَ أُمَّةً رَّسُوْلُهَا كَذَّبُوْهُ فَأَتْبَعْنَا بَعْضَهُمْ بَعْضًا وَّجَعَلْنٰهُمْ أَحَادِيْثَ فَبُعْدًا لِّقَوْمٍ لَّا يُؤْمِنُوْنَ

'பின்னரும் நாம் நம்முடைய தூதர்களைத் தொடர்ச்சியாக அனுப்பி வைத்தோம். ஒரு சமுதாயத்திடம் அதன் தூதர் வந்த போதெல்லாம், அவர்கள் அவரைப் பொய்யாக்கவே முற்பட்டார்கள்; ஆகவே நாம் அச்சமூகத்தாரையும் (அழிவில்) ஒருவருக்குப் பின் ஒருவராக்கி நாம் அவர்களை(ப் பின்வருவோர் பேசும் பழங்) கதைகளாகச் செய்தோம். எனவே, நம்பிக்கை கொள்ளாத மக்களுக்கு (அல்லாஹ்வின் ரஹ்மத்) நெடுந் தொலைவேயாகும்' (23 அல் முஃமினூன்: 44)

அகீதா என்ற பதம் எத்தகைய சந்தேகத்திற்கும் இடமின்றி உறுதியாக நம்பி ஏற்றுக் கொள்ளல் என்ற கருத்தைத் தருகிறது. இஸ்லாமிய பரிபாஷையில் அர்கானுல் ஈமான் என்ற அடிப்படை இஸ்லாமிய நம்பிக்கைகளையும் அவை தொடர்பான விடயங்களையும் அகீதா என வழங்குவர். இது அல்அகாயித் எனும் பன்மைச் சொல்லினாலும் வழங்கப்படுவதுண்டு.

உலகில் தோன்றிய எல்லா நபிமார்களும் றஸூல்மார்களும் ஒரே அகீதாவையே போதித்தார்கள். இவ்வுண்மையை அல்குர்ஆன் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறது. '(விசுவாசிகளே) நூஹ்க்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் (தீன்) மார்க்கமாக்கி இருக்கிறான். ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹி மூலம் அறிவிப்பதும் இப்றாஹீம், மூஸா, ஈஸா ஆகியோருக்கு நாம் உபதேசித்ததும் என்னவென்றால் மார்க்கத்தை (தீனை) நிலையாகக் கொள்ளுங்கள். அதில் பிரிவினை செய்து கொள்ளாதீர்கள்...' *(42 அஷ்ஷூறா-13)*

மனித வரலாற்றின் எல்லாக் காலங்களிலும் இறைத் தூதர்களால் போதிக்கப்பட்ட அகீதா ஒன்றாகவே இருந்தது. ஆயினும் கால இட மாற்றங்களுக்கு ஏற்பவும் சந்தர்ப்ப


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

சூழ்நிலைகளைப் பொறுத்தும் ஷரீஆ (சட்ட விதிமுறை) மாற்றம் கண்டு வந்துள்ளது. எனினும் நபிமார்களுக்குப் பின் வந்த மக்கள், இறைத் தூதர்கள் போதித்த அகீதாவில் களங்கம் ஏற்படுத்தினர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாம் அல்லாஹ் நபிமார்களையும் றஸூல்மார்களையும் அனுப்பி சீரான அகீதாவைப் போதித்தான்.

இதன் தொடரில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கு அமைய அகீதாவைப் போதித்தார்கள். அவர்கள் போதித்த அகீதா அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் அடங்கியுள்ளது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்திலும் ஸஹாபாக்கள் காலத்திலும் இஸ்லாமிய அகீதா சீரான நிலையிலேயே காணப்பட்டது. அவர்கள் அது குறித்து சர்ச்சைப்படவுமில்லை. சந்தேகம் கொள்ளவுமில்லை. பகுத்தறிவு ரீதியிலான விளக்கங்களை வழங்கவுமில்லை. இறைத் தூதர் போதித்த அகீதாவை அதன் அசல் வடிவில் அப்படியே நம்பி ஒழுகினார்கள்.

ஆயினும் இஸ்லாமிய வரலாற்றில் பிற்பட்ட காலங்களில் முஸ்லிம் சமூகத்திற்குள் உருவான அரசியல் ரீதியான உட்பூசல்கள், அந்நியர்களின் சிந்தனைகள், சமயப் பிரிவுகளுடன் ஏற்பட்ட உறவுகள், தொடர்புகள், பகுத்தறிவை எல்லை கடந்து பிரயோகிக்கும் நிலை, தீவிரப் போக்கு, மனோ இச்சைகளைப் பின்பற்றியமை, எதிரிகளின் சதி, மூடநம்பிக்கைகள் முதலான காரணிகளால் அகீதா அதன் எளிமைத்தன்மையை இழந்தது. அதன் உயிரோட்டமும் உயர்வும் மங்கின. அகீதா சார்ந்த விடயங்கள் வெறும் தத்துவ சர்ச்சைகளுக்கும் தர்க்க குதர்க்க வாதங்களுக்கும் உட்டபட்டனவாக மாற்றமடைந்தன.

உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி நடத்தையைச் சீர்செய்து தனிமனிதனையும் சமூகத்தையும் உயர் நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய அகீதா, தத்துவ விசாரணைக்குட்பட்டு வெறும் ஆய்வுப் பொருளாக மாறுகின்ற ஆபத்து தோன்றியது. இதன் விளைவாகக் காலப்போக்கில் அகீதாவை மையமாக வைத்துப் பல சிந்தனைப் பிரிவுகள் தோன்றின. இதற்கு கவாரிஜ், கதரிய்யா, ஜபரிய்யா முஃதஸிலா, முர்ஜிய்யா முதலானவற்றை உதாணமாகக் குறிப்பிடலாம். இவை தூய இஸ்லாமிய அகீதாவுக்கு முரணாக வழிகேடான கொள்கைகளையும் சிந்தனைகளையும் முன்வைத்தன.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்னர் கிலாபத்துக்கு தகுதியானவர் யார் என்பதில் ஏற்பட்ட அரசியல் ரீதியான சர்ச்சையை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற ஷீஆக்கள் எனும் பிரிவினர் பிற்காலத்தில் முரண்பட்ட அகீதா சார் பிரிவினராக வளர்ந்தனர்.

அகீதாவுக்கு முரணான சிந்தனைகள் தோற்றம் பெற்றபோது அவற்றின் தாக்கத்திலிருந்து அகீதாவின் தூய்மையைப் பாதுகாக்க இமாம்கள் அயராது உழைத்து வந்துள்ளனர். அவர்களுள் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல், இமாம் அபுல்ஹசன் அல்அஷ்அரீ, அபு மன்ஸுர் அல்மாதுரீதி, அபூ ஜஃபர் அத்தஹாவி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

முஃதஸிலா சிந்தனைக்கு எதிராகப் போராடிய இமாம் அஹ்மத் அவர்கள் ''நான் உயிருடன் இருந்து இஸ்லாம் மடிவதை விட இஸ்லாம் உயிருடன் இருந்து நான் மடிவது சிறந்தது'' என்று கூறிய வார்த்தைகள் அகீதாவின் தூய்மையைப் பாதுகாப்பதற்கு மேற்கொண்ட தியாகத்திற்குச் சான்றாய் அமைகின்றது.

தூய அகீதாவிற்கு எதிரான சிந்தனைகள் தோற்றமுறும் போதெல்லாம் அவற்றிலிருந்து முஸ்லிம் உம்மத்தைப் பாதுகாத்து இஸ்லாமிய அகீதாவின் நிழலில் வழிநடாத்தக்கூடியவர்கள் தோற்றம் பெறுவார்கள் என்பதை வரலாறு உண்மைப்படுத்துகிறது.

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

❖ المُعْتَزِلَةُ ❖ المُرْجِيَّةُ ❖ الجَبرِيَّةُ ❖ القَدَرِيَّةُ ❖ الخَوَارِجُ ❖ الشِّيْعَةُ

**பயிற்சி**

1. அகீதா என்றால் என்ன?
2. வழிகெட்ட அகீதா சார் சிந்தனைப் பிரிவுகள் நான்கைக் குறிப்பிடுக
3. அகீதாவில் பல்வேறு சிந்தனைப் பிரிவுகள் தோற்றம் பெற்றமைக்கான காரணிகள் ஐந்து தருக.
4. அகீதாவின் தூய்மையைப் பாதுகாக்க பங்களிப்புச் செய்த இமாம்கள் நால்வரைக் குறிப்பிடுக.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக